[1981 ஏப்ரல் 20

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடுநிலைப் பள்ளி, ஆரம்பப் பள்ளி, எலிமெண்டரி எஜுகேஷன் அடிப்படையில் இந்தப் பதில் தரப் பட்டிருக்கின்றது. 8-ஆம் வகுப்பு என்று சொல்லப்படுவது, 11 ஆண்டுக்கால எஸ். எஸ். எல். சி. படிப்பு. 10 ஆண்டு காலமாக அதைக் குறுக்கிய பிறகு, 8-ஆம் வகுபின் தரம் கொஞ்சம் உயர்ந்திருக்கிறது. இந்தக் கல்வியை செகண்டரி கிரேடு படித்த வர்கள் மாணவர்களுக்குச் சொல்லித் தருவதில் பல சங்கடங்கள் இருக்கின்றன. மாணவர்கள் தரம் குறைந்துகொண்டே இருக்கி றது என்ற ஒரு பொதுவான கருத்து இருக்கிறது. ஆகவே, அந்த அடிப்படையில்தான் தரமான கல்வியைத் தரவேண்டுமென்று 1 முதல் 12 வகுப்புகள் என்று சொல்லிக் கொண்டு, இடையிலே 8 ஆம் வகுப்பு தரமில்லாத கல்வியைத் தந்தால், அது பலஹீன மான பகுதியாக மாறி, மேற்கொண்டு தருகின்ற கல்வி பயனற்று போய்விடும் என்ற அந்த அடிப்படையிலேதான் நாம் கருத்து அறிந்து வருகிறோம். மற்றவர்களுடன் ஆலோசித்து, உரிய காலத்தில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. செ. செம்மலை : பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது ஆரம்பக் கல்வி ஊராட்சித் துறையின் கீழும், உயர் நிலைக் கல்வி, மேல் நிலைக் கல்வி அரசாங்கத்தின் நேரடிப் பார்வையில் இருக்கிறது. இந்த நிலையை மாற்றி, கல்வித் துறை அனைத்தையும் ஒரு நிர்வாகத்தின் கீழ் கொண்டுவர ஒரு கல்வி வாரியம் அமைக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, வாரியம் அமைக்கின்ற யோசனை இப்போது எதுவும் இல்லை. ஆனால், மேல்நிலைக் கல்வி, உயர் நிலைக் கல்வி எப்படி அரசாங்கத்திடம் இருக்கிறதோ அப்படித் தான் தொடக்கக் கல்வியும் இருக்கிறது. ஆனால், ஆசிரியர்கள், பள்ளிக்கூட கட்டிடங்கள் பொறுப்பு பெரும்பாலாக ஊராட்சித் துறையிடம் இருக்கிறது. இதைப் பற்றிச் சிந்தித்து, அந்த ஆசிரியர்களையும், அரசு ஊழியர்களாக்குவது என்ற ஒரு முடி வுக்கு வந்திருக்கிறோம்.

மாமல்லபுரத்தில் உள்ள சிற்பக்கலை மற்றும் கட்டிடக் கலை பயிலகம்.

*வினா எண். 799—திரு. து. புருஷோத்தமன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) மாமல்லபுரத்தில் உள்ள சிற்பக்கலைக் கூடத்தில் தற் போது எத்தனை பேர் பயிற்சி பெறுகிறார்கள்?

1981 ஏப்ரல் 20]

(ஆ) பயிற்சி முடிந்ததும் அவர்களுக்கு அரசு வேலை வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கிறதா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) தற்போது மாமல்லபுரத்தில் அமைந்துள்ள சிற்பக்கலை மற்றும் கட்டிடக் கலைப் பயிலகத்தில் முதலாம் ஆண்டு முதல் ஐந்தாம் ஆண்டு வரையில் 152 மாணவர் பயிற்சி பெற்று வருகின்றனர்.

(ஆ) இல்லை.

திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே பயிற்சி பெறுகின்ற மாணவர்கள் எந்தவிதமான சிற்பத்தைச் செய்கிறார்கள். அங்கே தனிப்பட்டவர்களுக்குக் கூட சிற்பங்கள் செய்து கொடுக்கப்படு கிறதா? அல்லது அரசாங்கத்திற்குத் தேவைப்படுகிற சிற்பங்களை தான் செய்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாமல்லபுரத்தில் இந்தப் பயிற்சி நிலையத்தில் மாணவர்கள் பயிற்சி பெறுகிற வகையில், ஒரு பள்ளிக் கூடத்தைப் போன்று கல்லூரியைப் போன்றுதான் இருந்து வருகிறது. இது ஒரு பயிலுலகம். அவர்களுக்குப் பயிற்சியை தருகிறோம். பயிற்சியை முடித்தவர்கள் வெளிநாடு களிலும், உள்நாட்டிலும் வேலையை பெறுகிறார்கள். பயின்ற வர்கள் யாரும் வேலை இல்லாமல் இருப்பதாகக் குறிப்பு இல்லை.

திரு. உ. சுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாணவர்களுக்கு அதிகமான வேலை வாய்ப்பு கிடைப் பது கஷ்டமாக இருக்கிற காரணத்தால், அரசு தரப்பில் கட்டப் படுகிற கட்டிடங்களை பழங்கால தமிழக சிற்பக் கலையை ஒட்டி கட்டுவதற்கு, பயிற்சி பெற்ற மாணவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கக் கூடிய வகையிலும், பழங்கால சிற்பக்கலையை ஊக்கு விப்பதற்கு உதவுகிற முறையிலும் அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாணவர்களுக்கு வேலை கிடைக்காமல் இருக்கிறது என்ற நிலைமை இல்லை என்பதை நான் ஏற்கனவே சொன்னேன். வெளி நாடுகளிலும், உள் நாட்டிலும் வேலை வாய்ப்பைப் பெறுகிறார்கள். ஆகவே வேலை யில்லை என்ற பிரச்சினை இல்லை. நாம் இதற்காக குறைவாக மாணவர்களைச் சேர்த்து அவர்களுக்குப் பயிற்சி தருகிறோம். ஆனால் கட்டிடம் கட்டும்போது சிற்பக் கலைக்கு வாய்ப்பு தரவேண்டுமென்ற யோசனை அரசிடம் இருக்கிறது. அதை நாம் சார்பான துறைக்கு சொல்லிக் கொண்டு வருகிறோம்.

திரு. ஆ. வெள்ளைச்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாமல்லபுரத்தில் சிற்பக் கலைக் கூடத்தில் பயிற்சி பெறும் மாணவர்களைக் கொண்டு சிலைகளைச் செய்து வெளி நாடுகளுக்கு அனுப்பும் யோசனை அரசிற்கு இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது நாம் சிற்பக் கலையை சொல்லித் தருகிறோம். அவர்களைக் கொண்டு சிலைகளை தயாரிப்பது என்பது, அது இந்தத் துறையின்கீழ் வராது. அது வேறு துறையைச் சார்ந்ததாகும்.

திரு. ப. பொன்னுரங்கம் : தலைவர் அவர்களே, மாமல்ல புரத்தில் சிற்பக் கலையைப் பயில பயிற்சிக் காலம் எவ்வளவு ? பயிற்சிக் காலத்தில் 'ஸ்டைபண்ட்' எதுவும் மாணவர்களுக்கு வழங்கப்படுகிறதா ? அப்படியானால் ஸ்டைபண்ட் தொகை எவ்வளவு என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது பற்றிய விவரம் இல்லை. ஸ்டைபண்ட் தருவதாகத்தான் என்னிடத்தில் சொல்லியிருக் கிறார்கள்.

மேல்நிலைப் பள்ளிகளில் நாட்டு நலப்பணித் திட்டத்தினை செயல்படுத்துதல்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

*வினா எண் 800.—திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா :—

(அ) மேல்நிலைப் பள்ளிகளில் நாட்டு நலப்பணித் திட்டம் ஏதேனும் செயல்படுத்த தமிழக அரசிடம் திட்டம் ஏதேனும் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில்; இது பற்றிய விவரம் என்ன?

(இ) மத்திய அரசு உதவி உண்டா ?

(ஈ) எவ்வளவு உதவித் தொகை வழங்கப்பட உள்ளது ?